செ.வெ.எண். 119 நாள். 18.2.2009

செய்தி வெளியீடு

## செக் குடியரசின் இந்திய நாட்டிற்கான துணைத் தூதர் Ms. ஈவா டிரடகோவா ( Ms. Eva Drdakova) அவர்கள், மாண்புமிகு தமிழக செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்களை, இன்று (18.2.2009), சென்னை–தலைமைச் செயலகத்தில், சந்தித்து உரையாடினார்கள்.

இன்று (18.2.2009), சென்னை–தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்களை, செக் குடியரசின் இந்திய நாட்டிற்கான துணைத் தூதர் Ms. ஈவா டிரடகோவா ( Ms. Eva Drdakova) அவர்கள் சந்தித்து உரையாடினார்கள். ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் சேர்ந்து நடத்தும் கலை நிகழ்ச்சிகளை இவ்வருடம் செக்கோஸ்லோவேக்யா நாடு தலைமையேற்று நடத்துவதாகவும், அக் கலை நிகழ்ச்சிகளை சென்னையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடத்துவது குறித்தும், நிகழ்ச்சிகளில் மாண்புமிகு தமிழக செய்தித் துறை அமைச்சர் அவர்களை பங்கேற்குமாறும், அழைப்பு விடுத்தார்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தின் பண்பாட்டினையும், கலாச்சாராத்தையும், தொன்மையான கலைகளை தெரிவித்து, வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான கலைஞர்களை வைத்து நடத்தப்பட்டுவரும் 'சென்னை–சங்கமம் ' நிகழ்ச்சி விபரங்களை தெரிவித்து, அடுத்த வருடம் நடைபெறும் 'சென்னை–சங்கமம் ' நிகழ்ச்சியில், செக் குடியரசின் துணைத் தூதர் அவர்களை பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டார்கள். மேலும், தமிழகத்தில் இவ்வரசு பொறுப்பேற்றபிறகு தொழில் மேம்பாட்டிற்காக 22 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட விபரங்களையும், ரூபாய் முப்பத்திரண்டாயிரத்து நூற்று முப்பத்து மூன்று கோடி அளவில் முதலீடு செய்யப்பட்டுள்ள விபரத்தினையும் தெரிவித்து, செக்கோஸ்லோவேக்யா நாட்டு தொழிலதிபர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்கள். செக் குடியரசின் துணைத் தூதர் அவர்கள், சென்னையில் செக்கோஸ்லோவேக்யா நாட்டு தொழிலதிபர்களை வைத்து 'முதலீட்டுக் கருத்தரங்கம்' நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இக்கூட்டத்தின் விபரங்களை எடுத்துச் செல்வதாக கூறினார்கள். மேலும், தமிழகத்திற்கும், செக்கோஸ்லோவேக்யா நாட்டிற்கும், கலாச்சார–கலைநிகழ்ச்சி பரிவர்த்தனை செய்வது குறித்தும் உரையாடினார்கள். அவ்வாறு செக்கோஸ்லோவியா நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவேண்டுமென்றும் செக் குடியரசின் துணைத் தூதர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9